Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08/2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 2<br><br>Defense<br>Court |
| Name | இந்திரா |
| Husband Name | செந்தில் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.12.2021.** | |

**முதல் விசாரணை**

நான் எட்டமநாய்க்கன்பட்டியில் வசித்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி மோகன் எப்போதும் மதுபோதையில் தெருவில் நின்று சத்தம்போட்டுக்கொண்டிருப்பார். 19.05.2019 அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் எனது வீட்டின் முன்னால் நின்று எதிரி மதுபோதையில் சத்தம்போட்டுக்கொண்டிருந்தார். அப்போது எனது கணவரின் நண்பரான செந்தில் ஏன் சத்தம்போட்டுக்கொண்டு இருக்கிறிர்கள் என்று எதிரியிடம் கேட்டார். அவர் சத்தம் போடுவதை நிறுத்தவில்லை தொடர்ந்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். எதிரி எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர் தான் அவர் அப்படி தான் பேசுவார் அவரிடம்நீங்கள் பேசாதீர்கள் என்று கூறி எனது கணவரையும் அவரது நண்பர் செந்திலையும் நான் வீட்டிற்குள் அழைத்துச்சென்றுவிட்டேன். அதன்பிறகு எனது கணவரும் அவரது நண்பர்செந்திலும்

எனது வீட்டின் வெளியே கட்டிலைப்போட்டு அதில் படுத்திருந்தார்கள் . அப்போது அங்கு வந்த எதிரி நான் பார்த்துக்கொண்டிருந்த போது எனது கணவரின் நண்பர் செந்திலைப்பார்த்து தேவடியா பயலே ஊரு விட்டு ஊரு வந்து என்னை பேசுகிறாயா என்று கூறி செந்தில் படுத்திருந்த கட்டிலின் அருகே சென்ற எதிரி கையில் வைத்திருந்த அறுவாளால் செந்திலின் இடதுபக்க காதின் பின்புறம் அறுவாளால் வெட்டினார் அதை செந்தில் தடுத்தபோது செந்திலின் வலது கை பெருல்விரலில் வெட்டுப்பட்டு பெருவிலரல் துண்டானது. நான் எதிரியை மாமா வெட்டாதீர்கள் என்று கூறினேன். ஆனால் எதிரி கேட்காமல் மீண்டும் அறுவாளால் செந்திலின் இடது முன்கையின் பின்பக்கம் மற்றும் இடது மார்பு மற்றும் இடது பக்க முதுகில் வெட்டினார். நான் சத்தம் போட்டதைப்பார்த்து அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து எதிரியை வெட்டவிடாமல் பிடித்துக்கொண்டார்கள். எனது கணவர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார் . 108 ஆம்புலன்ஸ் வந்து காயமடைந்த செந்திலை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சொன்றார்கள். நானும் எனது கணவரும் காயப்பட்ட செந்திலுடன் 108 ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு சென்றோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் இரத்தக்கரை படிந்த 4 முள வேஸ்டியை தான் காயம் பட்ட செந்தில் சம்பவத்தின் போது அணிந்திருந்தார் அந்த வேஸ்டி சா.பொ.2. என்னிடம் காட்டப்படும் இரத்தக்கரை படிந்த பனியனை தான் காயம் பட்ட செந்தில் சம்பவத்தின் போது அணிந்திருந்தார் அந்த பனியன் சா.பொ.3. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/இந்திரா

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.